(ஆ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத் தாள்கள் (தமிழ்நாடு மூன்றாம் திருத்த) மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள்கள் (தமிழ்நாடு மூன்றாம் திருத்த) மற்றும், தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள், வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.